**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

**எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032**

**தொலைபேசி 044-22201337**

**மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in**

**இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in**

**முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண். 154/மா/2024**
**நாள் 25.09.2024**

திரு.கோ.கோவிந்தராஜ், — மனுதாரர்
சென்னை–600 083.

Vs

மண்டல அலுவலர், — எதிர் மனுதாரர்
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி

*****

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக்நகர், 15வது தெரு, கதவு எண்.22/43 என்ற முகவரியில் வசிக்கும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவரின் 02.09.2024 நாளிட்ட மனு 02.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டு, 154/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக்நகர், 15வது தெரு, கதவு எண்.22/43 என்ற முகவரியில் வசிக்கும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவரின் முறையீட்டு மனுவில்

" சென்னை, தி.நகர் G.N.செட்டி சாலை கதவு எண்.77/A என்ற முகவரியில் தளம் ஒன்றுக்கு 5,000 சதுர அடி என தரைத் தளத்தில் முருகன் இட்லி கடை என்ற ஹோட்டலும் மற்றும் அதன் மேல் தளத்தில் J.R.S.Corner Rice Restaurant ஆகியவற்றிற்கு Parking வசதிகள் இல்லாமல் இருப்பதால் மேற்கண்ட ஹோட்டல்களுக்கு வரும் வாடிக்கையாளர்கள் நடை பாதையிலும், சாலைகளிலும் வாகனங்களை நிறுத்தி போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தி வருவதால் ஹோட்டல் கட்டிடம் முன்பு NO Parking Boardகள் அமைக்கவும் வரும் காலங்களில் இக்கட்டிடத்தில் Parking வசதிகள் அமைக்கவும் உரிமையாளருக்கு அறிவுறுத்தி **Notice** அளித்து பதிலளிக்க கடந்த 24.03.2016 ஆம் ஆண்டு போக்குவரத்து காவல் துறை இணை ஆணையர், உதவி ஆணையர் இவர்களுக்கு புகார் அளித்து அதன்படி போக்குவரத்து காவல் துறையினர் கட்டிட உரிமையாளருக்கு Parking வசதிகள் அமைக்க Notice அளித்தார்கள் எனவும், இதுவரை அக்கட்டிடத்தில் Parking வசதிகள் அமைக்கவில்லை என்றும், ஒரு வழிச் சாலையில் அதிக வாகனங்களை ஹோட்டல் முன்பு நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்றும், 28.06.2016 அன்று மாநகராட்சி அதிகாரிகளும் ஹோட்டல் கட்டிடத்தின் உரிமையாளருக்கு Notice

அளித்தார்கள் என்றும் ஆனால் Parking வசதிகள் அமைக்காததால் சென்னை மாநகராட்சி ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், உதவிப்பொறியாளர் இவர்களுக்கு ஹோட்டலுக்கு வழங்கிய உரிமத்தை ரத்து செய்து இழுத்து மூட கோரி 03.03.2017 அன்று புகார் மனு அளிக்கப்பட்டது என்றும் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் குறித்து 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் காவல் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் அவர்களால் எச்சரிக்கை செய்தும் அக்கட்டிட உரிமையாளர்கள் பின்பற்றவில்லை மற்றும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

3) மேற்கண்ட புகார் மனு தொடர்பாக ஆய்வு செய்ததில் மனுதாரர் 2016 மற்றும் 2017–ஆம் ஆண்டுகளில் காவல்துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் அளித்துள்ளது தெரிய வருகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு மேலான புகார் மனுக்கள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 10(3)ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"<u>10 (3)</u> : The Ombudsman shall not enquire in to matter relating to:-

a) xxx

b) xxx

c) Any Complaint filed after the expiry of five years from the date on which the occurrence is said to have taken place''

4) மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகாரின் தன்மை மேற்கண்ட சட்ட பிரிவின் வரம்பிற்குள் வருவதால், மனுதாரரின் மனு மீது விசாரணை மேற்கொள்ள அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து, அவ்வாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.கோ.கோவிந்தராஜ்,
22/43, 15வது தெரு,
அசோக்நகர், சென்னை–600 083.

2) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
NSK சாலை, கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

30/9/24